செய்தி வெளியீடு எண். 223 நாள். 24.04.2018

**உரம் மற்றும் பூச்சிமருந்து வாங்கும் விவசாயிகளுக்கு விலைப்பட்டியல் வழங்காத உரம், பூச்சிமருந்து விற்பனை நிலையங்கள் மீது கடும் நடவடிக்கை - மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் உத்தரவு!**

திருவள்ளூர் மாவட்டத்தில் 01.01.2018 முதல் நேரடி உர மானிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி விவசாயிகள் தங்களுக்குத் தேவையான உரங்கள் வாங்கிக் கொள்ள ஆதார் எண்ணுடன் விரல் ரேகை பதிவுடன் தேவைக்கேற்ப உரங்கள் வாங்கிக் கொள்ள வசதியாகவும், உடன் இணையதள விலைப் பட்டியலும் விவசாயிகளுக்கு வழங்கிடும் பொருட்டு மாவட்டத்தில் 250 விற்பனை முனைக்கருவிகள் அரசால் அனைத்து தனியார் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கி முறையான பயிற்சியும் வழங்கப்பட்டுள்ள நிலையில், 20.04.2018 அன்று நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விலை கொடுத்து வாங்கும் உரம் மற்றும் பூச்சிமருந்துகளுக்கு விலைப்பட்டியல் தருவதில்லை என மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் புகார் தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு விலைப்பட்டியல் தராத உர விற்பனையாளர்கள் மீது உரக்கட்டுப்பாடு சட்ட விதிகளின்படி கடும் நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

விவசாயிகள் உரம், பூச்சிமருந்து வாங்கும்போது தவறாமல் தங்களுடைய ஆதார் எண்ணுடன் சென்று வாங்கிய உரம் மற்றும் பூச்சி மருந்துகளுக்கான உரிய விலைப்பட்டியல் கோரி பெற கேட்டுக் கொள்ளப்படுகிறது. பட்டியல் தர மறுக்கும் உரம்/பூச்சிமருந்து கடைகளின் விவரத்தை **27662852** என்ற எண்ணிற்கு புகார் தெரிவிக்கலாம்.

மேலும், விவசாயிகள் தங்களால் வாங்கப்படும் உரம், பூச்சிமருந்துகள் அந்தந்தப் பகுதி வேளாண்மை விரிவாக்க மைய அலுவலர்களின் பரிந்துரையோடு வாங்கவும், வாங்கப்பட்ட உரம்/பூச்சிமருந்து சரியானதுதானா என்பதை உறுதி செய்து, அவற்றை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை அறிந்து பயன்படுத்த விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**